
# பெரியார் புகழ் வாழ்க!

பெரியார் என்பது
பெயரல்ல
சூரியனின் மிகுதி !

அறிஞர் அண்ணா
அய்யா கலைஞரின்
முழுப்பகுதி !



உன் தாடி
வெண் தாடி அல்ல
மின் கம்பி என
நரிக் கூட்டம்
மிரண்டது !

கரி துண்டு
உன் கருத்தை
சுவரில் எழுதியது
அது தோட்டாக்கள்
என திரண்டு !

உன் தடி ஊனிய
சத்தம் கேட்டுதானே
இன எதிரிகள்
ஓடினார்கள் !

சட்ட எரிப்பு
போராட்டம் என்று
அறிவித்தப் பிறகுதானே
சட்டத்தை எரித்தால் தண்டனை என்ன?
என்று சட்டம் தேடினார்கள் !

உன்னை முள்ளில்
அடித்தார்கள்
அடித்தவனுக்காகவே
பேசினாய் !

ஆணிகளில்
கிழித்தார்கள்
கிழித்தவனுக்காகே
அரியணைப் போட்டாய் !

நூல்
இயக்கி
பட்டம் உயரும் என்றால்
பட்டமே வேண்டாம்
என்றாய் !

புழுக்கள் நெளிந்த
சோறு
உன் வைக்கம் சிறை சொன்னது !

கல் உடைத்த வலியை
பெல்லாரி
சிறை சொன்னது !

உன் உடல் நலம் நலிந்ததை
கோவை
சிறை சொன்னது !

இந்தி திணிப்பை
எதிர்த்தாய் நேற்று !
ஆங்கிலத்தில் உயர்ந்தோம் இன்று !

தமிழ் நாடு
தமிழருக்கே என்றாய் !
சாதி ஒழிப்பில்
சாகும் வரை
நின்றாய் !

எங்கள்
கறுப்பு சிவப்பு
வேட்டியில்
நிமிர்ந்த நடையைத் தந்த
கறுப்புச் சட்டை நீ !

பாறையை
உடைக்கும்
நாட்டு வெடி - நீ !

விசம் முறிக்கும்
மூலிகைச் செடி - நீ

உன் விரல் எங்களுக்காக
நீண்டது !
உன் குரல்
எங்களுக்காக
பேசியது !

இட ஒதுக்கீடு
உன் உயிருக்கு நிகரானது !
பெண் உரிமை
உன் உள்ளத்தில்
நிலையானது !

அய்யா கலைஞர் ஆட்சியின்
சமத்துவபுரம்
உனக்கு
பூமாலைபோட்டது !

தலைவர்
மு.க.ஸ்டாலின் ஆட்சியின்
அனைத்து சாதியினரும் அர்ச்சகர்
ஆனது
உனக்கு
பொன் மாலை போட்டது !

ரிவோல்ட்
(ஆங்கிலம்)
குடியரசு
புரட்சி
விடுதலை இவை
உன்
இதழ்கள் அல்ல
போர் கருவிகள் விசிய காகிதம் !

அய்யா கலைஞர்
தலைவர்
மு .க.ஸ்டாலின்
சேனாதிபதி உதயநிதி ஸ்டாலின்
மூன்று தலைமுறையாக
போராடும் இவர்கள்
தந்தை பெரியாரின்
ஆயுதம் !



**ஈரோடு இறைவன்**
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி



கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதியை நேற்று (15.9.2026) காலை, சென்னை – அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் ”தமிழ்நாடு மண்ணுரிமைக் கட்சி பொதுச்செயலாளர் முகமது தாரிக் சையது தலைமையில் அக்கட்சியின் மாநில பொருளாளர் சாசின்பாத்திமா தாரிக், தலைமைநிலையச் செயலாளர் அரவிந்த்பாண்டியன், தென்மண்டலச் செயலாளர் குணா, துணைத் தலைவர் ராம்குமார், இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முகமது அல்ஹக்கிம், விருதுநகர் மாவட்டச் செயலாளர் முகேஷ்பாண்டியன், மதுரை மாவட்டச் செயலாளர் ராம்குமார், திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் ப்ரியதர்சன் உள்ளிட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் 2026 சட்டப்பேரவை இடைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு தமிழ்நாடு மண்ணுரிமைக் கட்சி முழு ஆதரவு அளிப்பதாகவும், இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ள கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு தமிழ்நாடு மண்ணுரிமைக் கட்சி நிர்வாகிகள் தோழர்கள் முழுமையாக பாடுபடுவார்கள் எனவும் தெரிவித்தனர்.

### பேரறிஞர் அண்ணாவின் 118–ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி!

## அண்ணா வெறும் படம் அல்ல; என்றும் நமக்குப் பாடம்!

### திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப்.16

நேற்று (15.9.2026) பகுத்தறிவுப் பகலவன் திராவிடர்தம் பேராசான் தந்தை பெரியார் அவர்களின் தலைமாணாக்கரான பேரறிஞர் அண்ணா அவர்களது 118 ஆவது பிறந்த நாள் பெருவிழா! தமிழ்மான, தன்மானப் பெருவிழா!



தனது கல்விப் பருவத்தை சென்னையில் முடித்தவுடன், தந்தை பெரியார் என்ற சுயமரியாதை ஈர்ப்பு மய்யத்தால் ஈர்க்கப்பட்ட அண்ணா, தந்தை பெரியார் அவர்களின் தன்மான இயக்கத்தின் தனிப்பெரும் தளபதியாக, தந்தை பெரியாரால் பெருமைப்படுத்தப்பட்டார்!

**திராவிடத்தின் மீட்சிக் காலமாக்கி வரலாறு படைத்த ‘அரசியல் அதிசயம்!’**

அண்ணா ஒரு பல்கலைக் கொள்கலன்! எழுத்து, பேச்சு, சிந்தனை, செம்மையான ஆளுமை, நாடாளுமன்றவாதி, ஓராண்டு முதலமைச்சர் பதவிக் காலம் என்ற குறுகிய தனது ஆட்சிக்காலத்தை, திராவிடத்தின் மீட்சிக் காலமாக்கி வரலாறு படைத்த ‘அரசியல் அதிசயம்’ ஆவார்!

பொதுவாழ்வில் அவர் தனது அறிவு ஆசானிடமிருந்து - ஈரோட்டில் ‘விடுதலை’ ஆசிரியராகி கற்றுக் கொண்ட பல பண்புகள் அவரை நாளும் உயர்த்தி, வரலாற்றில் எவரும் பெற முடியாத தனித்த ஓர் இடத்தில் அமர்த்தியுள்ளது!

**‘என்றும் எனது தலைவர் இடம் காலியே; அதை மீண்டும் அவரை அழைத்து வந்தே நிரப்புவேன்!’**

எதிர்நீச்சல், துணிவு, எதிரிகளிடத்தில் கூட கனிவு, ஆட்சி கிடைத்த போது பணிவு, ஆளுமையில் அவர் எந்த ஏற்றம் பெற்றாலும், அந்த ஆட்சியை தனது ஆசானுக்குக் காணிக்கை ஆக்கிய பண்பின் உச்சம். ‘என்றும் எனது தலைவர் இடம் காலியே; அதை மீண்டும் அவரை அழைத்து வந்தே நிரப்புவேன்’ என்ற வீர சபதத்தினை அரசியலில் நிறைவேற்றிக் காட்டிய விந்தை மனிதர் பேரறிஞர் அண்ணா என்ற பெரும் ஆளுமை!

‘நான் கண்டதும், கொண்டதும் ஆன தலைவர் தந்தை பெரியாரே!’ என்று கூறியது மட்டுமல்ல, அதைச் சொல்லாலும், செயலாலும் அரசு மூலம் நிரூபித்துக் காட்டிய மாவீரர் நம் அண்ணா அவர்கள்.

முதலமைச்சர் பதவி, அவரது வாழ்வின் வசந்தமல்ல; தந்தை பெரியாருடன் இருந்து பரப்புரை செய்ததே ’தம் வாழ்வின் வசந்தம்’ என்று மனந்திறந்த மாமனிதர் அவர்.

**தன்மான ஆடை வழங்கிய தகைசால் வள்ளல் அண்ணா!**

தந்தை பெரியார் ஏற்படுத்திய சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்கியதன்மூலம், அத்திருமணம் மூலம் பிறந்த தலைமுறைகளுக்குச் சட்டப்படி தன்மான ஆடை வழங்கிய தகைசால் வள்ளல் அண்ணா!

அறிஞர் அண்ணாவின் திராவிடர் ஆட்சிதான் மக்களின் சுயமரியாதை தொடங்கி, மாநிலங்களின் சுயமரியாதை வரை விளக்கி, அதற்காகப் போராட, அரசியல் களம் அமைத்தவர் நம் அண்ணா!

அண்ணா ஆட்சிதான், கலைஞர் மற்றும் மு.க.ஸ்டாலின் ஆட்சியாக அவ்வப்போது வளர்ந்து - வழிகாட்டியது!

காலத்தை வென்றிட்ட காவியத் தலைவர்!

எனவே, அண்ணா ஒரு காலத்தை வென்றிட்ட காவியத் தலைவர்.

என்றும் மக்கள் நெஞ்சில் இருக்கும் செந்தமிழ்ப் பெட்டகம்; அறிவுச் செம்மல்!

வாழ்க! வாழ்கவே!!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

### நே.சிற்றரசு தலைமை! 117 ‘அ’ வட்டம் - இளைஞர் அணி

## டி.ராகேஷ்குமார் இல்ல மணவிழா வரவேற்பு!

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை, செப். 16-

ஆயிரம் விளக்கு 122வது வட்ட முன்னாள் பொருளாளர் நினைவில் வாழும் சி. ராமச்சந்திரன், 117 ‘அ’ வட்டம் - இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. ராக்கேஷ் குமார் இல்ல திருமணவிழா வரவேற்பு 17.09.2026 வியாழக்கிழமை மாலை 6.30 மணியளவில் சேத்பட், ECO பார்க் (கே.எம்.சி.மருத்துவமனை) மார்லின் மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பிற்கு சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு தலைமை வகிக்கிறார்.

மா.பா.அன்புதுரை, திருமலை பொன்னு ரங்கம் முன்னிலை வகிக்கின்றனர்.

தேனா எல்.தவமணி, எஸ்.சத்தியபெருமாள், வழக்கறிஞர் ப. பிரகாஷ்,வழக்கறிஞர் ஜெ.எச்.எம்.இம்ரான், என். மோகன் வேல், தேனை டபுள்யூ தாஸ், மு.சா.பாரத் குமார் ஆகியோர் வரவேற்கி ன்றனர்.



இம்மணவிழா வரவேற்பில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை யேற்று மணமக்கள் ஆர்.பிரவின் (எ) அஸ்வின் -டி.அஸ்வினி ஆகியோரை வாழ்த்து கிறார்.

இம்மணவிழா வரவேற்பில் தயாநிதி மாறன் எம்.பி. அன்பகம், கலை, மருத்துவர் எழிலன் நாகநாதன், பூச்சி எஸ். முருகன், தூத்துக்குடி எஸ்.ஜோயஸ், கே. ஏழுமலை, ராஜா அன்பழகன், கே.ஜெ. சரவணன்,

நுங்கை வி.எஸ்.ராஜ், பா. இராபர்ட், ஜெ. நற்குண நாதன், ஆர். வெற்றி செல்வி, யு. மல்லிகா யுவராஜ், ஏ.எம். நந்தினி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எஸ். பிரேம்குமார், பி.சுரேஷ், எஸ். பொன்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா! சிலைக்கு மரியாதை!

## திருவள்ளூர் மணவாள நகரில் பொதுமக்களுக்கு உணவு!

### வி.ஜி.ராஜேந்திரன் வழங்கினார்!

திருவள்ளூர், செப்.16

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியம் மற்றும் திருவள்ளூர் நகர தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக அரசியலில் சமூகநீதி, சுயமரியாதை, மாநில சுயாட்சி, தமிழ் மொழி மற்றும் தமிழர் உரிமை ஆகியவற்றுக்காக ஆற்றிய மகத்தான பணிகளை நினைவுகூரும் வகையில் நிகழ்ச்சி நடைபெற்றது. அண்ணா உருவாக்கிய கொள்கைப் பாதையில் கழகம் தொடர்ந்து பயணித்து வருவதை நினைவு கூர்ந்து கழகத்தினர் உறுதியேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட அவைத் தலைவர் கே. திராவிட பக்தன், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கா. அரிகிருஷ்ணன், திருவள்ளூர் நகரக் கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், கடம்பத்தூர் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் பிரகாஷ் ஞானஒளி, திருவள்ளூர் முன்னாள் நகர்மன்றத் தலைவர் பொன் பாண்டியன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி.கே. நாகராஜ், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் தாடி நந்தகுமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் பி.ஆர். பிரபாகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.ஆர். திலீபன் , திருவள்ளூர் நகராட்சி கவுன்சிலர்கள் நீலாவதி பன்னீர்செல்வம், ஜி.ஆர். ராஜ்குமார் தாமஸ், வி.இ. ஜான், டி. செல்வகுமார், விஜயகுமார், தனலட்சுமி , திருவள்ளூர் நகரக் கழக நிர்வாகிகள் டி.எம். ரவி, கைலாசம், பாண்டியன், நந்தகுமார், முரளி, பாலகிருஷ்ணன், ராஜி, பவளவன், ராஜ்பால், தியாகு, உலகநாதன், ஹரிஷ், மோகன், ராஜன் , கடம்பத்தூர் கிழக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் சி.ஆர். குமரன், செங்குட்டவன், பாபு, லோகநாயகி, ராஜேந்திரகுமார், மோகனசுந்தரம், சி.ஆர். மணிகண்டன், ஜானகிராமன், ராம்கி, கார்த்தி, மகேஷ், டில்லி, சுதாகர், குப்புசாமி, திராவிட மணி, வாசு, மண்புகழ் மனோகரன், ஜெயபிரகாஷ், பாலசுப்பிரமணியம், முருகன், ராமதாஸ், அன்பழகன், ராஜேஷ், ஜான், பாஸ்கர், நரசிம்மன், பழனி, பெரியசாமி, தனசேகர், தயாளன், மோகன் அரிகிருஷ்ணன், சேகர், மணிகண்டன், பெருமாள், முத்து, சந்தோஷ், கோபி, முத்துப்பாண்டி, மகாலிங்கம், சீனிவாசன், அண்ணாமலை, சங்கர், ஜோதிலிங்கம், முரளி கிருஷ்ணன், உமாசங்கர், கோவிந்தன், காசி, சேகர், வெங்கடேசன், வேலாயுதம், ரமேஷ் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.